496—

சோளிங்கர் தாலுகா ஏற்படுத்துதல்

*4721 திரு ஏ. எம். முனிரத்தினம்:

மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சோளிங்கரை மையமாகக் கொண்டு தாலுகா ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

*திரு. ஏ.எம். முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் பிர்கா, வானவரம் பிர்கா, காவேரிப்பாக்கம் பிர்கா ஆகிய 3 பிர்காக்களை இணைத்து, சோளிங்கரை மையமாக வைத்து ஒரு தாலுகா ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிலை முன்பே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 497, டாக்டர் க.கோபால், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.
முற்பகல் 9.40

497—

நன்னிலத்தில் மாணவர் விடுதி

*3288—டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நன்னிலத்தில் பிற்பட்டோர் மாணவர் விடுதி ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992 ஏப்ரல் 8]

நன்னிலத்தில் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி இயங்கி வருகிறது. எனவே, மேலும் ஒரு விடுதி தொடங்குவதற்கு தற்பொழுது திட்டம் ஏதும் இல்லை.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பல் வேறு பகுதிகளிலிருந்து வந்து கல்வி பயிலுகின்றார்கள். அவர்கள் நலனைக் கருத்தில்கொண்டு வரும் நிதியாண்டிலேயாவது, அடுத்த நிதியாண்டிலேயாவது விடுதி ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாணவர்களில் சுமார் 200 பேர் தான் விடுதிகளிலே தங்கிப் படிப்பதற்குரிய அந்தத் தகுதிகளைப் பெற்றவர்கள் என்று குறிப்பு இருக்கிறது. என்றாலும், ஏற்கனவே அங்கே ஒரு மாணவியர் விடுதி இயங்கிக் கொண்டு இருக்கிறது.மேலும் அரிசன நலத் துறையிலும் ஒரு விடுதி இயங்கிக் கொண்டு இருக்கிறது, ஆகவே, விடுதிகளே இல்லாத ஊர்கள் பள்ளிகளையொட்டிய பகுதி நிறைய இருக்கின்ற சூழ்நிலையில் இந்த வேண்டுகோளை உடனடியாகப் பரிசீலிக்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள். இது நன்னிலம் குறித்த கேள்வி.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: பொதுவான கேள்விதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நன்னிலம் பற்றிய கேள்வி என்பது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல் எனக்குத் தெரிகின்றது. இருந்தாலும் இந்த நடப்பு ஆண்டில் பிற்படுத்தப்பட்ட மாணவர் மாணவிகளுக்காக நாம் எத்தனை ஹாஸ்டல்கள் திறக்க இருக்கின்றோம்? அது குறித்து ஜில்லா வாரியாக ஏதாவது குறிப்புகள் இருந்தால், அதை அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நல மானியக் கோரிக்கை விவாதத்திலேயும் மிகத் தெளிவாக கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நானும் பேசி இருக்கிறேன். இந்த ஆண்டுக்கு 13 மாணவியர் விடுதி திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அது எந்தெந்தப் பகுதிகள் என்பது இனிமேல் தான் தீர்மானிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 498, திரு. டி. வேலையா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.